செய்தி வெளியீடு எண் : 1958 நாள் : 07.11.2022

# செய்தி வெளியீடு

## ஜவகர்லால் நேருவின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகள் குறித்தும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கு தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக நடத்தும் பேச்சுப்போட்டி – அழைப்பு

ஜவகர்லால் நேருவின் கருத்துக்களையும், சமூகச் சிந்தனைகளையும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளி / கல்லூரி மாணவ, மாணவியரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம். அவர்களுக்குத் தனித்தனியே பேச்சுப் போட்டிகள் 14.11.2022 (திங்கள்கிழமை) நேரம் மு.ப 10.00 மணிக்கு நடைபெறவுள்ளன. சென்னையில் வட சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை ஆகிய மூன்று இடங்களில் இந்தப் பேச்சுப்போட்டிகள் நடத்தப்படும். ஒரே நாளில் சென்னை உட்பட 38 மாவட்டங்களிலும் இப்போட்டிகள் நடைபெறும்.

பள்ளி மாணவர்களுக்கு வட சென்னையில் அரசு உயர்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை – 600 049 லும், தென் சென்னையில் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அசோக்நகர், சென்னை – 600 005லும், மத்திய சென்னையில் செயகோபால் கரோடியா மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை–600015லும் பேச்சுப்போட்டிகள் நடைபெறும்.

கல்லூரி மாணவர்களுக்கு வட சென்னையில் டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரி வியாசர்பாடி, சென்னை – 600039லும் தென் சென்னையில் இராணிமேரிக் கல்லூரி, சென்னை – 600005லும், மத்திய சென்னையில் பாரதி மகளிர் கலைக் கல்லூரி பிராட்வே, சென்னை– 600001லும் பேச்சுப்போட்டிகள் நடைபெறும்.

பள்ளி மாணவர்களுக்கான தலைப்புகள் 1) குழந்தைகள் தின விழா 2) ரோசாவின்ராசா 3) ஜவகர்லால் நேருவின் தியாகங்கள் 4) நூல்களைப் போற்றிய நுண்ணறிவாளர்நேரு 5) அண்ணல் காந்தியின் வழியில் பண்டிதர் நேரு 6) இளையோர்களின் வழிகாட்டி சவகர்லால் நேரு ஆகியனவாகும். கல்லூரி மாணவர்களுக்கானதலைப்புகள் 1) இந்திய விடுதலைப் போரில் நேருவின் பங்களிப்பு 2) பிரதமர் நேரு கட்டமைத்த இந்தியா 3) அண்ணல் காந்தியும் பண்டிதர் நேருவும் 4) நேருபெருமகனாரின் பஞ்சசீலக் கொள்கை 5) உலக

அமைதிக்கு பண்டிதர் நேருவின் தொண்டு 6) அமைதிப்புறா – ஜவகர்லால் நேரு ஆகியன ஆகும்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் பள்ளி மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/–,இரண்டாம் பரிசு ரூ.3000/–, மூன்றாம் பரிசு ரூ. 2000/– என்ற வகையிலும் சிறப்புப் பரிசாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் ரூ. 2000/– வீதம் இரண்டு பேருக்கு வழங்கப்பெறும். பேச்சுப்போட்டியில் வெற்றி பெறும் கல்லூரி மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/–,இரண்டாம் பரிசு ரூ.3000/–, மூன்றாம் பரிசு ரூ.2000/– என வழங்கப்பெறும்.

இயக்குநர்

தமிழ் வளர்ச்சி

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in